**செய்தி வெளியீடு எண்: 184** **நாள்: 16.03.2013**

**செய்தி வெளியீடு**

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, இரண்டாவது பசுமை புரட்சியை ஏற்படுத்துவதற்கு முக்கியமான தேவை தடையற்ற நீர்பாசனம் ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, நீர்ப்பாசன ஆதாரங்களை அதிகரிக்க புதிய கால்வாய்கள் அமைத்தல், ஏரிகளை தூர்வாருதல், தடுப்பணைகள் அமைத்தல், பழைய அணைகளை புனரமைத்தல் என எண்ணற்ற நீர்ப்பாசனத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள உப்பாறு கால்வாய் 572 Mcft கொள்ளளவு உடையது. இந்த கால்வாய் மூலம் 6,060 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. இந்த கால்வாயில் தற்பொழுது நீர்வரத்து குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, இந்த கால்வாயினை பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட கால்வாயுடன் இணைப்பதன் மூலம், இந்தக் கால்வாயில் நீர்வரத்து அதிகரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதால் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டக் கால்வாயினை உப்பாறு கால்வாயுடன் இணைக்கும் திட்டப் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தினை செயல்படுத்த 8 கோடியே 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் உத்திரவிட்டுள்ளார்கள்.

தமிழக கடற்கரை 1,076 கீ.மீ. நீளமுடையது. இதன் கரையோரங்களில் பெரும்பாலும் கடலையே நம்பி வாழும் மீனவர்கள் வீடுகள் கட்டிக் கொண்டு வசித்து வருகின்றனர். கடல் அரிப்பு, கடல் கொந்தளிப்பு, கடல் உட்புகுதல் போன்ற இயற்கை சீற்றங்களினால் மீனவர்கள் அடிக்கடி பாதிப்படைகின்றனர்.

இயற்கை சீற்றங்களிலிருந்து கடற்கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பதற்காக தடுப்பு சுவர் அமைத்தல், தூண்டில் வளைவுகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டத்தில் எண்ணூர் முதல் எர்ணாவூர் குப்பம் வரையிலுள்ள கடலோரப் பகுதிகளில் ஏற்படும் கடல் அரிப்புகளை தடுப்பதற்காக 31 கோடியே 82 லட்சம் ரூபாய் செலவில் 10 தூண்டில் வளைவுகளை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், நேதாஜி நகர் முதல் நெட்டுக்குப்பம் வரை உள்ள கடற்கரை பகுதிகளில் கடல் சீற்றம் காரணமாக, அடிக்கடி தண்ணீர் உட்புகுவதாலும், கடல் அரிப்பு ஏற்படுவதாலும், அங்கு வசிக்கும் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே, அவர்களது துயர் துடைக்க, தற்பொழுதுள்ள கடல் அரிப்பை தடுக்கும் சுவரினை 2 மீட்டர் உயர்த்தி அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 26 கோடியே 58 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மொத்தத்தில் கால்வாய் அமைக்கும் பணிகள் மற்றும் கடல் அரிப்பை தடுக்கும் பணிகளுக்காக 66 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள்:- 16.3.2013.